
பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 17 வெள்ளிக்கிழமை 03.10.2025 கதிர் 327

## இனிது ரகசியம் அல்ல!



முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவின் தனிப்பட்ட பாதுகாப்பு தலைமை அதிகாரியான நெவில் வன்னியாராச்சி நேற்றுக் கைது செய்யப்பட்டார். ☞2

# 700 கிலோ போதைப் பொருள் சிக்கிய வழக்கில் 'பெலியத்த சனா' என்ற தெற்கு வர்த்தகர் கைது

தங்காலைசீனிமோதரபகுதியில்மூன்றுலொறிகளிலிருந்து 700 கிலோ கிராமுக்கும் அதிகளவான போதைப் பொருள்கைப்பற்றசம்பவத்தில்போதைப்பொருள்வர்த்தகரான 'பெலியத்த சனா' மற்றும் போதைப்பொருளை நாட்டிற்குள் கொண்டுவர பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் படகின் உரிமையாளர் ஆகியோர் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்காலை சீனிமோதர மற்றும் கொடெல்லாவ பகுதியில் செப்டெம்பர் 22 (திங்கட்கிழமை) ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூன்று லொறிகள் கைப்பற்றப்பட்டன. குறித்த லொறிகளில் இருந்து சுமார் 700 கிலோ கிராமுக்கும் அதிகளவான போதைப்பொருள் மீட்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் இச்சம்பவத்தில் பிரதான சந்தேகநபராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பூமிதெலா என்பவரது ஆதரவாளரான பெலியத்த சனா என்னும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் குற்றச் சம்பவத்துக்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். அத்தோடு போதைப்பொருளை நாட்டிற்குள் கொண்டு வர பயன்படுத்தப்பட்டதாகசந்தேகிக்கப்படும்படகின்உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவுக்கு கிடைக்கப்பெற்றிருந்த இரகசிய தகவலுக்கமைய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்து சந்தேகநபரை கைது செய்திருந்தனர். வெளிநாட்டிலிருந்து சந்தேகநபர்கள் மேற்படி போதைப்பொருளை கடல் மார்க்கமாக நாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் வெளிநாட்டுக்கு தப்பிச்சென்றுதலைமறைவாகியுள்ளபிரபலபோதைப்பொருள் வர்த்தகரான உனகுருவே சாந்த என்பவருக்கு சொந்தமானது என தெரியவந்துள்ளது. அதேவேளை கடந்த 22 ஆம் திகதி சீனிமோதர பகுதியில் இருந்த வீடொன்றிலிருந்து உயிரிழந்த நிலையில் இருவரது சடலங்களும்,. சுற்றிவளைப்புகளின் போது ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும், ரிவோல்வர் ரக 5 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டிருந்தன.

## ஜேவிபி உறுப்பினரே தெற்குக்கு போதைப்பொருள் கடத்தியவர்

### விமல் வீரவன்ஸ நேரடியாகக் குற்றச்சாட்டு

**நாட்டுக்கு ஆளும்தரப்பு அனுசரணையுடன் போதைப்பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன, ஆளும்தரப்பு அனுசரணையுடன் அவை கைப்பற்றப்படுகின்றன. ஜேவிபியின் உறுப்பினரான புவக்தண்டா எனும் சனா என்பவரே தெற்குக்குப் படகில் பெருந்தொகையான போதைப்பொருட்களைக்கொண்டுவந்தார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.**

**கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**தெற்குமாகாணத்தில்அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள் பிரதான பேசுபொருளாக காணப்படுகின்றன. இந்த ஆளும்தரப்பில்தான்323கொள்கலன்கள்எவ்விதமான பரிசோதனைகளுமின்றிவிடுவிக்கப்பட்டன.**

**போதைப்பொருள் அடங்கிய இரண்டு கொள்கலன்கள் இலங்கைக்கு வருவதாக பன்னாட்டு புலனாய்வு பிரிவு அறிவித்தபோதும் அவற்றைக் கைப்பற்ற எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பொறுப்பற்ற வகையில் செயற்பட்டுவிட்டு இன்று பிறர் மீது குற்றஞ்சாட்டுகிறார்கள்.**

**ஆளும்தரப்பு அனுசரணையில்தான் போதைப்பொருட்கள்கொண்டுவரப்பட்டன, ஆளும்தரப்பு அனுசரணையுடன்தான் போதைப்பொருட்கள் தற்போது கைப்பற்றப்படுகின்றன. ☞2**

## டிங்கருக்கு 24 மணி நேர தடுப்புக் காவல் உத்தரவு

டுபாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் ஸ்ரீ தரன் நிரஞ்சன் என்னும் 'டிங்கரை' 24 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை செய்ய கொழும்பு நீதவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

அண்மையில் கொழும்பில் இரு பிரதான பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஸ்ரீ தரன் நிரஞ்சன் என்னும் 'டிங்கர்' வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்த நிலையில், டுபாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த புதன்கிழமை நாட்டிற்கு அழைத்து வரப்பட்டார். இந்நிலையில் சந்தேகபரை விமான நிலையத்தில் வைத்து கைது செய்திருந்த பொலிஸார் நேற்று (2) நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர்.

இதன்போது சந்தேகபரை 24 மணிநேரம் ☞2

## பெறுமதி சேர் வரி திட்டத்தை நீக்குவதைத் தடுத்து நிறுத்துக

### எதிர்க் கட்சித் தலைவர் நாணய நிதியத்திடம் கோரிக்கை

இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி திட்டத்தை நீக்குவதைத் தடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பன்னாட்டு நாணய நிதியத்திடம் வலியுறுத்தியுள்ளார். இந்த நீக்கம் இலங்கையின் ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.ஃ

கொழும்பில்உள்ளஎதிர்க்கட்சிதலைவர்அலுவலகத்தில் பன்னாட்டு நாணய நிதியத்தின் தூதுக் குழுவின் ☞2

## யாழ். தேவி தொடருந்தின் பயண நேரங்கள் மாற்றம்

யாழ்ப்பாணம்-கொழும்பு இடையே சேவையில் ஈடுபடும் யாழ். தேவி தொடருந்தின் பயண அட்டவணை மாற்றப்பட்டுள்ளதாக தொடருந்துத் திணைக்களம் அறிவித்துள்ளது. ஒக்டோபர் 7 முதல் 18 வரையான பயண அட்டவணையே திருத்தப்பட்டது

இந்த காலகட்டத்தில் யாழ். தேவி தொடருந்து கொழும்பு கோட்டையில் இருந்து காலை 6:40 மணிக்கு புறப்பட்டு பிற்பகல் 2:15 ☞2

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பிள்ளையானுக்கு நேரடித் தொடர்பு

### பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களுடன் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு நேரடித்தொடர்புகள் உள்ளன. தாக்குதல் குறித்து அவர் முன்கூட்டியே அறிந்திருந்தார் ☞2

## உ புதைகுழியின் மூன்றாம் கட்ட தோண்டும் பணிக்கான நிதி தயாராகிறது

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

செம்மணிப் புதைகுழியினைத் தோண்டுவதற்கான மூன்றாம் கட்ட நடவடிக்கைக்கான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கான பணிகள் நீதி அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

மனிதப் புதைகுழிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் எனச் சந்தேகிக்கப்படும் இடங்களில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்குப் போதுமான நிதி, ☞2

## 'என் மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்' லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தலைவர்

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் மீதான மக்களின் நம்பிக்கையை இல்லாதொழிப்பதற்கு ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். என் மீது போலியான பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் நான் ஈடுபட்டிருந்தால் நீதிபதியாக பதவி வகிக்கக்கூட எனக்கு தகுதியிருந்திருக்காது. எந்தவொரு அரசியல் கட்சியுடனும் நான் தொடர்புக்கொண்டிருக்கவில்லை. முன்வைக்கப்படும்குற்றச்சாட்டைமுழுமையாக நிராகரிக்கிறேன். நந்தன குணதிலக மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் ஊடகங்கள் மத்தியில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்காமல் அரசமைப்பு பேரவை மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கவேண்டும்.இவர்களின் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நீதிமன்றம் அவரை ஒக்டோபர் 17 வரையும் விளக்கமறியலில் வைத்துள்ளது.

நெவில் இராணுவத்தில் லெப்டினனட் கேணல்தரத்திலுள்ள அதிகாரி. அவரைக்கைது செய்திருப்பது லஞ்சம், ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு. அண்ணலுக்கு இருக்கும் அளவுக்கதிகமான சொத்துக்களே அவரைக் கைது செய்வதற்கான காரணம்.

கடந்த பல ஆண்டுகளாகவே அரச அதிகாரியாகஅவர்தனதுசொத்துவிவரங்களை ஆணைக்குழுவிற்கு முறையாகச் சமர்ப்பிக்கவில்லை என்ற குற்றச்சாட்டின் கீழேயே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இதனடிப்படையில் அவரது சொத்துக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அவரை விளக்கமறியலில் வைக்கும்படி ஆணைக்குழு கேட்டுக்கொண்டது.

இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 23 (அ) (1), 2023 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 127 (1) (எச்) மற்றும் (அ) ஆகியவற்றின் கீழ் அவர் மீதான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதாக ஆணைக்குழு தெரிவித்தது.

நெவில் எட்டு ஆண்டுகளாக தனது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் விவரங்களைலஞ்சஒழிப்புஆணையத்திற்கு முறையாகச் சமர்ப்பிக்காமல் 'டிமிக்கி' கொடுத்து வந்திருக்கிறாராம். அவருக்குச் சொந்தமாகபேருந்துகள், வாகனங்கள், வீடுகள், ஹோட்டல்கள், பெட்ரோல் நிலையங்கள் என்று பல சொத்துக்கள் உள்ளனவாம். ஒரு இராணுவ அதிகாரியாக இருந்துகொண்டு இவருக்கு எப்படி இத்தனை சொத்துக்கள் வந்தன என்பதுதான் கேள்வி.

யாருடையதாவது பினாமியாக இவர் செயற்பட்டாராஎன்பதுஇந்தவிசாரணைகளில் தெரியவரக்கூடும். அப்படியில்லாம் ஒரு இராணுவ அதிகாரியால் எப்படி இத்தனை சொத்துக்களைக் குவிக்க முடிந்தது என்று விசாரிப்பதாக இருந்தால் இவர் மட்டுமல்லர் இராணுவத்தின் உயர் பதவிகளில் அதுவும் போர்க் காலத்தில் வடக்கு கிழக்கில் உயர் பதவிகளில் இருந்த பலரிடம் இதுபோன்ற விசாரணைகளை நடத்தவேண்டியிருக்கும் அவர்களது சொத்துக்கள் குறித்து.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து உருக்கிரும்புகளை வெட்டி விற்றது முதற்கொண்டு முள்ளிவாய்க் காலில்குவிந்துகிடந்தவாகனங்களைவிற்றுத் தீர்த்தது உட்பட வன்னிக் காடுகளில் இருந்து பெரு மரங்களை வெட்டிக் கடத்தியது வரை பெருமளவில் குவிக்கப்பட்ட சொத்துக்களின் விவரங்களையும்வெளியேகொண்டுவந்தால் தேசிய மக்கள் சக்தி உண்மையிலேயே ஊழலை ஒழிப்பதில் அர்ப்பணிப்புடன் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால், படையினரில்கைவைத்தால்மக்கள்மத்தியில் செல்வாக்கிழப்பு ஏற்படும் என்று கருதி அதைத் தவிர்த்தால், ஒருகுடும்பத்தை இலக்கு வைத்து அல்லது எதிர்க் கட்சிகளை இலக்கு வைத்து மட்டுமே அது செயற்படுகின்றது என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்மை என்றாகிவிடும்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜேவிபி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்படும் போதைப்பொருள் தொகைக்கும், தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று ஆளும்தரப்பால் குறிப்பிடமுடியாது.

ஜேவிபியின் உறுப்பினரான புவக்தண்டா எனும்சனாஎனும்போதைப்பொருள்வியாபாரி அண்மையில் கைது செய்யப்பட்டார். அவரை விடுவிப்பதற்கு அரசியல் தரப்பில் இருந்து கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. இந்தச் சனாதான் படகு ஊடாக அம்பாந்தோட்டைப் பகுதிக்கு போதைப்பொருட்களை கொண்டு வந்துள்ளார். ஆகவேபிறரைகுற்றஞ்சாட்டமுன் தமது தரப்பின் மீதான குற்றச்சாட்டுக்களை ஆளும்தரப்பு ஆராய வேண்டும் என்றார்.

## உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித் துள்ளார். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலமாகியும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எந்தவொரு உருப்ப டியான நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லையே என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து முறையான விசாரணை இன்னமும் நடைபெற்று வருகின்றது. அத்துடன், விசாரணைகளில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

தாக்குதல் குறித்த தொடக்க கட்ட விசாரணைகளின் குறைபாடுகள், அலட்சியம் குறித்தும் தற்போது முறையான விசாரணைநடைபெறுகின்றது. பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்குதலில் நேரடியாக ஈடுபட்டுள்ள தகவல்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அவருக்குத் தாக்குதல் குறித்து முன்கூட்டியே தெரிந்திருக்கிறது' என்றார்.

## என் மீதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கத்தை நாட்டு மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும் என இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பா ளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்தார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எம் மீதும் ஆணைக்குழு மீதும் அரசியல்வாதிகளும், பிற தரப்பினரும் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதை ஆணைக்குழு அவதானித்துள்ளது. ஆணைக்குழு தொடர்பான விடயங்களை 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 118ஆவது பிரிவின் பிரகாரம் வெளிப்படுத்த வேண்டும்.

1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை காட்டிலும் தற்போதைய ஆணைக்குழு வேறுப்பட்டது. புதிய ஊழல் எதிர்ப்பு சட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட போதுமான தெளிவு மற்றும் விளக்கமில்லாமல் பேசுவதை அவதானித்துள்ளோம்.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான என்னைத் தொடர்புப்படுத்தி பலர் பல்வேறுப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். நான் இன்றும் மேல் நீதிமன்றத்தின் நீதிபதியாகவே உள்ளேன். இடைகாலத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பதவிக்கு அரசமைப்பு பேரவையினால் நியமிக்கப்பட்டுள்ளேன்.

ஆணைக்குழுவின் செயற்பாடுகள் வினைத்திறனாக்கப்பட்டுள்ள பின்னணியில் ஏன் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என்பது தொடர்பில் சிந்திக்குமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அரசியல்வாதிகளுக்காக நான் இவற்றை தெளிவுப்படுத்தவில்லை. நாட்டு மக்களுக்காகவே செய்தியாளர்கள் சந்திப்பை நடத்துகிறேன்.

நாட்டு மக்கள் என் மீதும், ஆணைக்குழு மீதும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் ஊடாக அந்த நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மக்களின்நம்பிக்கையை இல்லாதொழிக்கவே ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகின்றனர். ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு வகையிலான குற்றச்சாட்டுக்களை என் மீது சுமத்துகிறார்கள்.

ஜேவிபியின் சட்ட பிரிவில் நான் உறுப்பினராக இருந்தேன் என்று நந்தன குணதிலக என்பவர் குற்றஞ்சாட்டியுள்ளார். 2004ஆம் ஆண்டு நான் நீதிவானாக நீதிச்சேவையில் இணைந்துக்கொண்டேன், 2020ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டேன். செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் நான் ஈடுபட்டிருந்தால் நீதிவானாக பதவி வகிப்பதற்கு கூட எனக்கு தகுதியில்லை. நந்த குணதிலக கடந்த 20 ஆண்டுகளாக இதனைக் குறிப்பிடவில்லை.

நான் எந்த சந்தர்ப்பத்திலும் அரசியல் கட்சிகளுடன் தொடர்பில் இருக்கவில்லை. எந்த அரசியல் கட்சியின் பிரிவுகளிலும் பதவி வகிக்கவில்லை. ஆகவே இவர் முன்வைத்த குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிக்கிறேன்.

எவரேனும் ஒருவர் பொய் சொன்னால் ஒருசிலர் அந்தப் பொய்யை எடுத்துக்கொண்டு முழு உலகிற்கும் வலம் வருகிறார்கள். நாடாளுமன்றத்துக்கும் அதை கொண்டு செல்கிறார்கள். நாடாளுமன்றசிறப்புரிமையைப் பயன்படுத்திக்கொண்டு அந்தப் பொய்யைக் குறிப்பிடுகிறார்கள். நாடாளுமன்ற சிறப்புரிமையில் இருந்துக்கொண்டு குற்றச்சாட்டுவதால் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்க முடியாதுள்ளது.

சட்டத்தரணி உதய கம்மன்பில ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் 19ஆவது பிரிவின் பிரகாரம் நான் குற்றம் புரிந்துள்ளேன் என்று குறிப்பிடுகிறார். பணிப்பாளர் நாயகமாக பதவி வகிப்பதற்கு தகைமையில்லா விடயங்கள் பற்றி 19 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'தேர்தல் காலத்தில் ஏதேனும் அரசியல் கட்சியில் ஏதேனும் பதவி வகித்தல்' பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப்பதவிக்குஎன்னை நியமிக்க தெரிவு செய்தபோது அரசமைப்புப் பேரவைக்கு எனது சகல பொறுப்புக்கள் மற்றும் வகிபாகங்கள் அனைத்தையும் ஆவணங்கள் ஊடாகச் சமர்ப்பித்துள்ளேன்.

நந்தனகுணதிலகமற்றும்உதயகம்மன்பில ஆகியோர் ஊடகங்களில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்காமல் அரசமைப்புப் பேரவை மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவில் முறையாக முறைப்பாடளிக்கவேண்டும் என்று தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவுகாலமும்அமைதியாகஇருந்துவிட்டு இவர்கள் தற்போதுதான் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

அர்ஜூனமகேந்திரனுக்குவிதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடையை நான் இரத்துச் செய்துன் எனவும் தற்போது குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. அர்ஜூன மகேந்திரனுக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டதா என்பது எனக்கு நினைவில் இல்லை. நான் அவ்வாறு ஏதும் செய்யவில்லை என்பதை தெளிவாக குறிப்பிட்டுக்கொள்கிறேன். 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோட்டை நீதிவானாகப் பதவி வகித்தபோது நான்தான் ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜூன மகேந்திரன் ஆகியோருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்தேன். அவர்கள் அந்த பிடியாணையை மேல்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினார்கள். ஆகவே நீதிமன்ற உத்தியோகத்தராக நான் தவறிழைத்திருந்தால் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கலாம்.

இவ்வளவுகாலமும் இவர்கள் அமைதியாக இருந்து விட்டு தற்போது ஏன் இவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவேண்டும்? இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்கு ழுவின் மீதான மக்களின் நம்பிக்கையை சிதைவடையச்செய்யவே இவர்கள் திட்டமிட்ட வகையில் என் மீதும், ஆணைக்குழுவின் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள் என்பது தெளிவாக விளங்குகிறது.

இவர்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென்று பலர் பகிரங்கமாகவும், தனிப்பட்ட முறையிலும் கேட்கிறார்கள். இவர்களுக்கு எதிராக சிவில் வழக்குத் தாக்கல் செய்து நான் இவர்கள் பின்னால் செல்ல வேண்டும். அப்போது இதுவரையில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் மற்றும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் இரண்டாம் பட்சமாக்கப்படும். மக்களின் கவனமும் திசைத்திருப்பப்படும். இதனையே இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்குஎதிராக 2023ஆம்ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 118 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவை அவமதித்ததாக கருதி சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எமக்கு பல வேலைகள் உள்ளன. இவர்களின் அடிப்படை நோக்கத்தை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்றார்.

## யாழ். தேவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு வவுனியாவை வந்தடையும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். காங்கேசன்துறையிலிருந்து தெற்கு நோக்கிய சேவை காலை 11:00 மணிக்கு புறப்படும்.

இந்த மாற்றங்கள் தற்காலிகமானவை என்றும், ஒக்டோபர் 18க்குப் பிறகு வழக்கமான கால அட்டவணை மீண்டும் தொடங்கும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## செம்மணிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது அமைச்சிடம் இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

'மட்டக்களப்பு, குருக்கள் மடம் மனிதப் புதைகுழிக்கான நிதி முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் அடுத்த கட்ட அகழ்வுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் அலுவலக மட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன' என்றார் அவர்.

உரிய நடைமுறைகளை விரைவில் முழுமைப்படுத்திதேவையானநிதியைவழங்க நீதிஅமைச்சுநடவடிக்கைஎடுத்துள்ளதுஎன்றும் அவர் குறிப்பிட்டார். அதற்கமைய, மனிதப் புதைகுழி அகழ்வுக்கான நிதி விடயத்தில் எவ்வித சிக்கல்களும் இல்லை என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

## பெறுமதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ஈவன் பாப்பஜோர்ஜியோ மற்றும் நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி மார்த்தா வோல்ட்மைகேல் ஆகியோருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

ஏற்றுமதியாளர்கள் ஏற்கனவே சிரமப்படுகின்றனர் என்றும், மாற்றுத் திட்டம் எதுவும் இல்லாமல் இந்த வரி திட்டத்தை நீக்குவது இத்துறைக்கு ஒரு கடுமையான பாதிப்பாக அமையும் என்றும் எதிர்க்கட்சி தலைவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைய ஆய்வுகளின்படி சனத்தொகையில் சுமார் 50 சதவீதமானோர் தற்போது வறுமையில் வாழ்வதைச் சுட்டிக்காட்டிய அவர், வறுமையைக் குறைக்க இலங்கை அவசரமாக ஒரு இலக்குடன் கூடிய, நிலையான திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். நாணய நிதியத் திட்டம் நுகர்வை அதிகரித்திருந்தாலும், அது முதலீடு, சேமிப்பு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை நிவர்த்தி செய்யத் தவறிவிட்டது என்றும் அவர் கூறினார்.

பராட்டே சட்டம் மற்றும் பயனுள்ள கடன் மறுசீரமைப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் இல்லாததால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறிய சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

சாதாரண மக்களின் சுமையைக் குறைக்கும் அதே வேளையில், தொழில்கள் மற்றும் வேலைவாய்ப்பைப் பாதுகாக்கும் ஒரு வலுவான, மக்களை மையமாகக் கொண்ட சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவளிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் நாணய நிதியப் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பில், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாஷிம், எரான் விக்கிரமரத்ன, ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், ஹர்ஷன ராஜகருணா மற்றும் எஸ். எம். மரிக்கார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## டிங்கருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்துவைத்து விசாரணை செய்ய கொழும்பு நீதவான் நீதிமன்றம் அதிகாரிகளுக்கு அனுமதியளித்து உத்தரவிட்டிருந்தது.

கொழும்பு குற்றப்பிரிவு நீதிமன்றத்தில் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில், நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்திருந்தார். 36 வயதான கொழும்பு மட்டக்குளிபகுதியைசேர்ந்த ஸ்ரீதரன் நிரஞ்சன் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரருமான பழனி ஷிரான் க்ளோரியன் என்னும் கொச்சிக்கடை ஷிரானின் ஆதரவாளராவார்.

மேலும் கொழும்பு கிராண்ட்பாஸ் மாவத்தை பொது மாயனத்துக்கு முன்பாக முச்சக்கர வண்டியில் இருந்த நபர் சுட்டு படுகொலை செய்யப்பட்டமை மற்றும் பேலியகொடையில் துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டு மேலும் ஒரு நபர் காயமடைந்திருந்த சம்பவம் ஆகிய குற்றச்செயல்களுடன் ஸ்ரீதரன் நிரஞ்சனுக்கு தொடர்புள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# கை ஒலிபெருக்கி பயன்படுத்தி வியாபாரம் செய்வதற்கு தடை

## சம்மாந்துறை பிரதேச சபை அறிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதான வீதிகளில் கை ஒலிபெருக்கிகளை பயன்படுத்தி வியாபாரம் மேற்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதையடுத்து குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இத்தகைய செயற்பாடுகள் மதவழிபாட்டிடங்களில் நடைபெறும் வணக்க வழிபாடுகள் மற்றும் பொதுப் போக்குவரத்துக்கு



இடையூறு ஏற்படுத்துவதுடன் அதிக சத்தத்தினால் பொதுமக்கள் அசௌகரியமடைகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சம்மாந்துறை பிரதேச சபை மற்றும் சம்மாந்துறை பொலிஸ் நிலையம் ஆகியன இணைந்து ஒலிபெருக்கிகளை பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். கடந்த மாதம் 11 ஒலி பெருக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பிரதேச சபை தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்பதோடு அனைத்து வியாபாரிகளும் சம்மாந்துறை பிரதேச சபையின் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் சபை அறிவுறுத்தியுள்ளது.

# மருதமுனை நூலகத்தில் சிறுவர் தின நிகழ்வு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சர்வதேசசிறுவர்தினத்தை முன்னிட்டு மருதமுனை பொது நூலகம் மற்றும் கேஎம்.சி. பாலர்பாடசாலை இணைந்து ஒழுங்கு செய்திருந்த சிறுவர் சிறப்பு நிகழ்வு நூலகத்தில் ஒக்டோபர் நடைபெற்றது.

நூலகர் அமீனுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் றாபி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி, சித்திரக் கண்காட்சி, கதை சொல்லும் நிகழ்ச்சி, நூலக அறிமுகம் போன்றவை இடம்பெற்றதுடன் நிகழ்வில்




பங்கேற்ற 51 சிறுவர்களுக்கும் பரிசுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நூலகப் பணியாளர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரும் கலந்துகொண்டனர்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாகாண சபைத் தேர்தலுக்கு இனியும் தாமதம் வேண்டாம்

இலங்கையின் அரசியல் அமைப்பில் மாகாண சபைகள் மத்திய ஆட்சிக்கு இணையாக மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய அமைப்புகள். ஆனால் கடந்த பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படாததால், இச்சபைகள் இயங்காமல், மக்கள் சேவைகள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளன. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம் போன்ற துறைகளில் மாகாண அளவிலான தீர்மானங்கள் எடுக்கப்படாமல் இருப்பது, மக்களை மத்திய அரசின் கைவசம் மட்டுமே வைத்திருப்பதற்கு சமம்.

### தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடு

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ரத்தநாயக்க தெரிவிக்கும்போது மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமெனில் இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. ஒன்று – பழைய பிரதிநிதித்துவ முறையிலேயே தேர்தலை நடத்துவது. இரண்டு– புதிய தொகுதிகளை வரையறை செய்த பின் தேர்தலை நடத்துவது. ஆனால் புதிய தொகுதி வரையறைக்கு குறைந்தது ஒரு வருடம் தேவைப்படும். இது தேர்தலை மேலும் காலதாமதப்படுத்தும் முயற்சி. எனவே ஆளும்தரப்பு உண்மையில் தேர்தல் நடத்த விரும்பினால், அதற்கு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

### சட்ட சிக்கல்கள்- மக்கள் விருப்பமா?

முன்பு தயாரிக்கப்பட்ட தொகுதி வரையறை அறிக்கை நாடாளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டதால், அரசாங்கம் புதிய தொகுதி வரையறையை முன்னிறுத்தலாம். ஆனால் இது மக்கள் விருப்பமல்ல. மக்கள் எதிர்பார்ப்பது தாமதமின்றி தேர்தல் நடத்துவதே. சட்ட சிக்கல்களை முன்னிறுத்தி தேர்தலை ஒத்திவைப்பது ஜனநாயக அடித்தளங்களை மேலும் பாதிக்கும்.

### நடைமுறையான தீர்வு

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முன்வைத்த தனிநபர் பிரேரணை மிகவும் பொருத்தமானதாகும். அதன் மூலம் பழைய பிரதிநிதித்துவத் தேர்தல் முறையிலேயே தேர்தலை விரைவில் நடத்த முடியும். இதுவே மக்களின் விருப்பத்திற்கும், ஜனநாயகக் கடமையிற்கும் ஏற்புடைய நடைமுறையான தீர்வாகும்.

### ஜனநாயகக் கேடு

மாகாண சபைத் தேர்தலை தாமதப்படுத்தும் ஒவ்வொரு நாளும் ஜனநாயகத்தின் மேல் நிழல் வீசுகிறது. அரசாங்கம் தொடர்ந்து சட்ட சிக்கல்களையும் நடைமுறை காரணங்களையும் கூறி காலத்தை வீணாக்கினால், அது மக்கள் விருப்பத்திற்கு எதிரான செயலாகும். புதிய தொகுதி வரையறை கட்டாயமல்ல என்பதையும் தேர்தல் ஆணைக்குழுவே வெளிப்படையாக தெரிவித்துள்ளது. எனவே பழைய முறையிலேயே தேர்தலை நடத்துவது சரியான தீர்வாகும்.

### ஆளும்தரப்பின் பொறுப்பு

மாகாண சபைகள் இயங்காமல் இருப்பது ஏற்கனவே ஜனநாயகத் திற்குப் பாதிப்பு விளைவித்துள்ளது. இனியும் தாமதப்படுத்தினால், அது நாட்டின் ஜனநாயக மரபை பலவீனப்படுத்தும். எனவே அரசாங்கம் உடனடியாக சாணக்கியன் முன்வைத்த பிரேரணையை ஏற்று, மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

## சிறுவர் பாதுகாப்புக் குறித்த வீதி நாடகம் அம்பாறையில்




(ஹாரீஸ்)

'அன்பால் காப்போம்-உலகை வெல்வோம்' எனும் கருப்பொருளில் வீதி நாடகம் ஒன்று ஒக்டோபர் 1 அம்பாறை மாவட்ட செயலக முன்றலில் ஏற்பாடு செய்யப்பட்டது.

சமூக கல்வி கற்பதற்காகவும், சிறுவர்களை பாதுகாக்கவும், பராமரிக்கவும், துஸ்பிரயோகம் செய்தலை தடுப்பதற்காகவும் உஹானா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஹிமிதுராவ மகாவித்தியாலய சிறுவர்களினால் இந்த வீதி நாடகம் அரங்கேற்றப்பட்டது.

மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர் தம்மிகா குலத்துங்கவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற வீதி நாடகத்தை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, மேலதிக மாவட்ட செயலாளர் ஜெகராஜன், கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஏனைய பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் பார்வையிட்டனர்.

## புலமைச் சிட்டுகளுக்குக் கௌரவம்

(ஸாகிர்)

நிந்தவூர் கல்விக் கோட்டத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எழுதி வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தர தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக கல்முனை கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் சாஜித், நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி முதர்ரிஸ், கல்முனை கல்வி நிலைய முன்பள்ளி பிரதிக் கல்விப் பணிப்பாளர் றஸீன், ஓய்வு பெற்ற முன்னாள் மூத்த பொலிஸ் அதிகாரியும் நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவருமான ஜௌபர் உட்பட இன்னும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, இந்த ஆண்டின் இளம் சாதனையாளர் விருது சம்மாந்துறையைச் சேர்ந்த மாணவி மின்ஹாவிற்கும் வழங்கப்பட்டது.

தார்மீகச் சமூகத்திற்கான சமூக விழிப்புணர்வு (ஸம்ஸ் ஸ்ரீலங்கா) அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு அந்த அமைப்பின் தலைவர் ஜனூபர் தலைமையில் நடைபெற்றது.

## 'எங்கள் நீதிபதிகளுக்கு விடை கொடுப்பு' கல்முனையில் பிரியாவிடை நிகழ்வு





(நூருல் ஹுதா உமர்)

'எங்கள் நீதிபதிகளுக்கான விடை கொடுப்பு' எனும் தொனிப்பொருளில் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வில், மேல் நீதிமன்ற நீதிபதி ட்ரோஸ்கி, சிவில் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ராமகமலன், மேல் நீதிமன்ற நீதிபதி றியாழ் மற்றும் நீதிவான் சம்சுதீன் ஆகியோருக்கான பிரியாவிடை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஆண்டனி பிள்ளை ஜூட்சன், மாவட்ட நீதிபதி கருணாகரன் மற்றும் கல்முனை நீதிவான் சாஜீத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒரே நேரத்தில் நால்வருக்கு விடை கொடுக்கும் நிகழ்வை நடத்துவது கல்முனை சட்டத்தரணிகள் சங்க வரலாற்றில் இதுவே முதல் தடவை. சங்க தலைவி சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிக்கா சாரிக் தலைமையில் நிகழ்வு நடத்தப்பட்டது.

# எது போராட்டம்?

என்.சத்திய மூர்த்தி

மன்னார் காற்றாலை எதிர்ப்புப் போராட்டம் குறித்து தமிழ் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட புகைபடங்களை வைத்து பார்க்கும் போது, மக்கள் எந்தெந்த பிரச்சினைகளுக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்று தெரிகிறது. இது கூட்டமே இல்லாமல் தேர்தல் பரப்புரைகளும் போராட்டங்களும் நடத்தி வரும் பிரிவுபட்ட தமிழ் அரசியல் தலைமைகளுக்கு நல்ல பாடமாக அமையட்டும்.

குறிப்பாக மன்னார் போராட்டம் நடைபெறும் காலகட்டத்தில், யாழ்பாண நகரில் 'தமிழருக்கு சர்வதேச நீதி' கோரி அரங்கேறிய போராட்டத்தில் சிறிய எண்ணிக்கையிலேயே மக்கள் கலந்துகொண்டிருந்தனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இந்த போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்திருந்தாலும், அவர்களால்கூட வழக்கமான அளவில் கூட்டம் சேர்க்க முடியவில்லை என்பதே உண்மை.

## சுற்றுசூழலில் ஆர்வம்

காற்றாலை போராட்டத்தின் பின்னால் கத்தோலிக்க ஆயர்களின் பங்கு இருந்தது என்று முன்பு செய்திகள் தெரிவித்தன. அது குறித்து சில பத்திரிகை ஒளிப்படங்களும் வெளிவந்தன. வேறு எந்தவொரு மக்கள் பிரச்சினையிலும் இனப்போருக்கு பிந்தைய தற்போதைய காலகட்டத்தில் தலையிடாத திருச்சபை, ஏன் சுற்றுச்சூழல் குறித்த சர்ச்சைகளில் மட்டும் ஆர்வம் காட்டுகிறது என்ற கேள்வி எழாமல் இல்லை.

கடந்த தசாப்தத்தில், அண்டை நாடான இந்தியாவில், அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டில், கூடம்குளம் அணு மின்நிலையத்திற்கு எதிரான மீனவர்கள் தொடங்கிய மக்கள் போராட்டத்தில் அங்குள்ள கத்தோலிக்க ஆயர்கள் வெகுவாக பங்குபெற்றனர் என்பது உண்மை. அது போன்று, உலகெங்கும், சுற்றுசூழல் காரணங்களுக்காக மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் நாடுகளில் எல்லாம், அங்குள்ள கத்தோலிக்க ஆயர்கள் பெருமளவில் பங்குபெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்து வந்துள்ளது.

மன்னார் காற்றாலை பிரச்சினையில், இது குறித்து முதல் எச்சரிக்கை செய்வதே, இதனையே காரணம் காட்டி, அரச தரப்பு போராட்டத்தை திசை திருப்பிவிட வாய்ப்பு உள்ளது என்பதால்தான். இன்னும் சொல்லப்போனால், வட மாகாணத்தில் அண்மைக் காலங்களில், மதப் பிரச்சினை, இலைமறைவு, காய்மறைவாகத் தோன்றி உள்ளது. அதனை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். இதனை எவ்வாறு மத துவேசத்தை வளர்க்காமல் முன்னெடுப்பது என்பது அடுத்த விடயம்.

## வாழ்வாதாரம்

அதேசமயம், மன்னார் போராட்டகாரர்களும், அவர்களுக்குத் தலைமை வகிப்போரும் சரி, வட மாகாணத்தின் பிற பகுதிகளில் இருந்து அவர்களுக்கு தார்மீக ஆதரவு வழங்குவோரும் சரி, முதலில் சர்ச்சை செய்து முடிவு செய்ய வேண்டிய விடயம் ஒன்று உள்ளது. அதாவது, காற்றாலைகள் நிறுவப்பட்டால், அதன் காரணமாக, புலம்பெயரும் பறவைகளும் அதன் காரணமாக சுற்றுலா துறையும் பாதிக்கப்படும் என்பது ஒரு காரணம்தான். ஆனால் மக்கள் சார்ந்த ஒரு காரணமும் கூறப்படுகிறது. அதாவது, காற்றாலைகள் காரணமாக, மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி தொழில் நலிந்துவிடும் அபாயம் உள்ளது என்றும், அதன் காரணமாக, உள்ளூர் மீனவ சமுதாயமே ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்படும் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதுவேதான், இந்தியாவில் கூடம்குளம் மற்றும் கேரள மாநிலத்தில் அதானி குழுமத்தின் விழிஞம் துறைமுகம் ஆகியவற்றிற்கும் எதிராக நடந்தேறிய போராட்டங்களுக்கும் காரணமாகக் கூறப்பட்டது. இதுபோன்று தென்னிலங்கையிலும் அவ்வப்போது பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டன. ஏன், ஒரு தசாப்தத்திற்கு முன்னர், மன்னார் வளைகுடாவில் இந்தியாவின் துணையோடு ஆழ்கடலில் பெட்ரோலியம் எடுக்கும் திட்டத்தை எதிர்த்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நடுக் கடலில் அந்தத் திட்டம் நிஷ்வேற்றப்பட இருந்ததால், மீனவர்களின் வாழ்வாதாரம் என்பதைவிட, சுற்றுசூழலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தென்னிலங்கையின் அறிவுஜீவிகள் போராட்டங்களை முன்னெடுத்தார்கள். ஆனால், அவர்களது முயற்சி இல்லாமலே, அரசியல் காரணங்களுக்காக அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. இன்றுவரை, அது முன்னெடுக்கப்படவில்லை. அந்த நிலைமையே இன்னும் தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.

## சித்தாந்தவாதிகள்

இன்று மன்னார் காற்றாலையை எதிர்த்துப் போராடும் மக்கள், நாளையே, இதே காரணங்களைக் கூறி, காங்கேசன்துறை துறைமுக விரிவாக்க திட்டத்தை எதிர்க்க மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்? அதற்கு வேறு வடிவம் கொடுத்து, பலாலி விமான நிலையத்தை சர்வதேச பயணத்தரத்திற்கு உயர்த்துவதாக வாக்குறுதி கொடுத்துள்ள இந்திய அரசின் செயல் திட்டத்தை எதிர்க்க மாட்டார்களா, என்ன?

முன்பு இந்திய அரசின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்பட உள்ளாதாக கூறப்பட்ட காங்கேசன்துறை துறைமுக விரிவாக்க திட்டத்தை அரசு கைவிடப்போவதாக, அண்மையில் யாழ்பாணத்திற்குப் பயணம் செய்த போக்குவரத்து துறை அமைச்சர் பிமல் ரத்நாயகே அறிவித்தார். அவரது கூற்றுப்படி, காங்சேன்துறை விரிவாக்க திட்டத்தின் அடிப்படையில், எந்தவிதப் பயனும் இல்லை என்றும் கூறி உள்ளார்.

அது மட்டுமல்ல. துறைமுக விரிவாக்க திட்டத்திற்கு இந்தியா அளித்துள்ள நிதி உதவியையும் திரும்பிக் கொடுக்க இருப்பதாகவும் அமைச்சர் பிமல் அறிவித்துள்ளார். இது அவரது முடிவா, அல்லது, அமைச்சரவை முடிவா, அல்லது அவர்களை மீறிய அரச அதிபர் அநுரகுமாரவின் முடிவா, என்று கேள்வி கேட்டால் அதற்குப் பதில் கிடைக்காது. ஆனால், பிமல் ரத்நாயக்கே போன்றோர், ஆளும் ஜேவிபி கட்சியின் சித்தாந்தவாதிகள் என்ற போர்வையில் தங்களது பேரினவாத கருத்துக்களையும், அதன் ஒரு பகுதியாக தங்களது இந்தியா எதிர்ப்பு கொள்கைகளையும் ஒன்றிணைத்து செயல்படுகிறார்களோ என்ற கேள்வி எழுகிறது.

காரணம், அமைச்சரின் அறிவிப்பை தொடர்ந்து யாழ்பாண தமிழ் செய்தி ஆய்வாளர் ஒருவர் காங்கேசன்துறை துறைமுகம் இலாபகரமாக











செயல்படவில்லைஎன்பதுபோன்றபொய்யானதோற்றத்தை உருவாக்குவதாக அமைச்சரைச் சாடி இருக்கிறார். அது குறித்து வரவு-செலவு கணக்குகளையும் அவர் தெளிவாக்கக குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற விதண்டாவாத கருத்துக்களை பலாலி விமானநிலைய விரிவாக்கம் குறித்தும் அமைச்சர் முன் வைக்கமாட்டார் என்று கூறமுடியாது. புலாலியை சர்வதேச விமான நிலையமாக விரிவாக்க இந்திய அரசு நிதி உதவி செய்துள்ளது. அமைச்சரின் கணக்குகள்படி, அந்தப் பணிக்கு மேலும் நிதி உதவி தேவைபடும் என்றால், அதனை இந்திய அரச பிரதிநிதிகளுடன் பேசித் தீர்த்திருக்கவேண்டும். அப்படி இல்லாமல், தனது முடிவை பத்திரிகையாளர்கள் முன்னிலையில், ஒரு அரசு விழாவில் போட்டு உடைத்துள்ளது எதில் சேர்த்தி என்பது தெரியவில்லை.

## கோழி பிடிக்கும் வேலை...

இந்தப் பின்னணியில், இந்த இரு திட்டங்களையும் செயல்படுத்தவேண்டும் என்று தமிழ் அரசியல் தரப்பில் இருந்து எந்தவித குரலும் எழவில்லை. இவ்வாறு ஒரு பிரச்சினை தோன்றி உள்ளது என்பதே அவர்களில் எத்தனை பேருக்கு தெரியும்? அவ்வாறு தெரிந்தாலும், அதிலுள்ள நெளிவு-சுளிவுகளை அவர்களில் எத்தனை பேர் புரிந்துகொண்டிருப்பார்கள்? அவ்வாறே புரிந்துகொண்டிருந்தாலும், அவர்களில் எத்தனை பேர் தங்களுடைய 'இந்தியா-எதிர்' நிலையில் நின்றுகொண்டு அந்தத் திட்டங்களுக்கு ஆதரவாகப் பேசுவார்கள்?

குறிப்பாகப் பலாலி, சர்வதேச விமான நிலையமாக உயர்த்தப்பட்டால், புலம்பெயர்ந்தோர், கொழும்பு காட்டுநாயகே விமான நிலையத்தில் வந்து இறங்காமல் நேரடியாக யாழ்பாணம் வந்திறங்கி, வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உள்ள தங்களது ஊர்களுக்கும் குடும்பங்களுக்கும் சென்றடையலாம். அவர்களது வருகையால், குறிப்பாக யாழ்பாணம் நகரை சுற்றி, வியாபாரம் மற்றும் வேலை வாய்ப்புகள் பெருகும்.

ஒருகாலத்தில், யாழ்பாண தமிழர்களின் தலையெழுத்தே அரசசேவையாகவே இருந்தது. 'கோழி பிடிக்கும் வேலையாக இருந்தாலும், அது கவர்ண்மென்ட் வேலையாக இருக்க வேண்டும்' என்பதே அவர்களது குறியாக இருந்தது. இப்போது, இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில், அதிலும் குறிப்பாக நாட்டின் பொருளாதார நிலைமை இன்னமும் சீர்கெட்டே இருக்கும் சூழலில், அரசு வேலைவாய்ப்பு என்பது தமிழர்களுக்குக் குதிரை கொம்பு.

இந்தப் பின்னணியில் தனியார் வேலைவாய்ப்புகள் எங்கெல்லாம், எப்படி எல்லாம் கிடைக்கிறதோ, அந்த வாய்ப்புகளை தமிழ் இளைஞர்கள் பயன்படுத்தி கொள்ளவேண்டும். அப்படி இல்லாமல், ஏதோ, இவர்கள் மட்டுமே நாட்டில் உள்ள அறிவாளிகள் என்றும், அவர்களுக்கான வேலை வாய்ப்புகள் தங்க தட்டில் வைத்து யாரோ அளிப்பார்கள் என்று யாராவது கருதினால், தொடர்ந்து ஏமாற்றமே மிஞ்சும்.

இன்னும் சொல்லப்போனால், தற்போதைய சிங்கள-பௌத்த இனத்தவர் அரசு உள்ளிட்ட வேலைவாய்ப்புகளை அள்ளிக்கொண்டு போகிறார்கள் என்றால், அவர்களின் முந்தைய தலைமுறையினர், இது போன்ற அமைப்புசாரா துறைகளில் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொண்டு அதில் இருந்து ஒவ்வொரு படியாக முன்னேறினார்கள். அதற்கு, 'சிங்களம் மட்டும்' என்ற அரசின் கொள்கையும் பெரிய அளவில் உதவியது.

அப்போதெல்லாம், அரசவேலைவாய்ப்புகளில் அனைத்து மட்டங்களிலும் பணிகளை அள்ளி சென்ற தமிழர்கள், சிங்கள மொழி படிக்கமாட்டோம் என்று வறட்டு கௌரவம் பேசி, உள்ள வாய்ப்புகளையும் இழந்து, அதுவே இனப்போரில் முடிந்து, இன்று ஆதரவற்றவர்களாவே இருக்கிறார்கள். ஆனால், தங்கள் பெற்றோர், அவர்களின் பெற்றோர் ஆகிய தலைமுறையினரின் வறட்டு கௌவரமும் வீண் ஜம்பமும் ஒரு துளிகூடக் குறையவில்லை.

இவர்களா, வாழ்க்கையில் இருந்து கற்றுக்கொள்ள போகிறார்கள்?

## பரவலான எண்ணவோட்டம்

அந்த விதத்தில், தற்போது மன்னர் காற்றாலை எதிர்ப்பு போராட்டங்களை முன்னிருந்தும் பின்னிருந்தும் இயக்குபவர்கள், அதுபோன்ற காரணங்களை ஆளும் தரப்பு தமிழர் கோரும் பிற வளர்ச்சி திட்டங்களுக்கு எதிராக பயன்படுத்த மாட்டார்கள் என்று உறுதிகூற முடியுமா? குறிப்பாக, ஆளும் தரப்பினருக்கு, யாழ்பாணம் உள்ளிட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், நிரம்பவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள். உள்ளாட்சி அமைப்புகளிலும் பிரதிநிதிகள் உள்ளார்கள்.

இவை போதாது என்று, ஆளும் ஜே.வி.பி. ஆதரவாக தமிழ் மீனவர் சமுதாயம் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்தது என்ற பரவலான எண்ணவோட்டம் உள்ளது. அவர்களை காரணம்காட்டி, ஆளும் தரப்பே நாளை, பலாலி, காங்சேன்துறை மற்றும் பிற தமிழர் பகுதி வளர்ச்சி பணிகளை நிறுத்த முயலமாட்டார்கள் என்று யாராலும் உறுதி கூற முடியாது.

முன்பு இனப்போர் முடிந்த காலகட்டத்திய மகிந்த ராஜபக்சவின் அரசைப் போலவே, இந்த அரசும் அரசியல் தீர்விற்குப் பதிலாக வளர்ச்சிப் பணிகள் என்ற செயல்திட்டத்தை கையில் எடுத்துள்ளதாகவே தோன்றுகிறது. ஆனால், ஒரு கட்டத்திற்கு மேல், அந்த வளர்ச்சிப் பணிகளுக்கும் உள்ளிருந்தே ஆப்பு அடிக்கிறார்கள்.

அதற்கு அவர்கள் தமிழர்களின் காரண-காரியங்களை முன்வைக்கமல் இருக்கவேண்டும். அதற்கான பொறுப்பும் கடமையும்கூட தமிழர்கள் கையில்தான் இருக்கிறது.

# உபகரணங்கள் மதிப்பீடு முடியாமையால் மகிந்த வீட்டை ஒப்படைக்கவில்லையாம்

விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தில் அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் உள்ள நிலையில் அவற்றை மதிப்பீடு செய்து அடையாளப்படுத்தாமல் வீட்டை ஒப்படைக்க முடியாது. மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்ளாமல் வீட்டை ஒப்படைத்தால் 'மகிந்த ராஜபக்ச அரச சொத்துக்களை லொறியில் ஏற்றிச் சென்றுவிட்டார்' என்று குற்றஞ்சாட்டுவார்கள். அரச அதிகாரிகள் மதிப்பீடுப் பணிகளை மேற்கொள்ளாத காரணத்தால்தான் இல்லத்தை ஒப்படைக்கவில்லை என்று முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஊடக பேச்சாளர் மனோஜ் கமகே தெரிவித்தார்.

விஜேராம அரச இல்லம் தொடர்பில் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ முன்வைத்த குற்றச்சாட்டு குறித்து செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச கொழும்பு விஜேராம அரச இல்லத்தை இதுவரையில் அரசுக்கு ஒப்படைக்கவில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். ஆளும்தரப்பு குறிப்பிடும் பொய்களில் இதுவும் ஒன்று.

விஜேராம இல்லத்தை ஒப்படைக்குமாறு அரசுத் தலைவர் செயலகம் 2025.09.24 அன்றுதான் உத்தியோகபூர்வமாகக் கடிதம் அனுப்பி வைத்துள்ளது. வெளியேறுவதற்கான நிச்சயிக்கப்பட்ட காலம் ஏதும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை.

இந்த இல்லத்தில் அரசுக்கு சொந்தமான சொத்துக்களும், அரசுத் தலைவர் செயலகம் மற்றும் பிரதமர் அலுவகத்துக்கு சொந்தமான சொத்துக்களும் உள்ளன. இந்த சொத்துக்களை மதிப்பீடு செய்து அடையாளப்படுத்துமாறு குறித்த அரச அதிகாரிகளுக்கு நாங்கள் ஏற்கெனவே அறிவுறுத்தியிருந்தோம்.

அதிகாரிகள் இங்கு வருகைத் தந்து குறித்த மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதைதாமதப்படுத்தியதால்தான் இந்த வீட்டை ஒப்படைக்கவில்லை. இல்லையென்றால் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ 'மகிந்த ராஜபக்ச அரசுக்கு சொந்தமான சொத்துக்களை லொறியில் ஏற்றிச் சென்று விட்டார்' என்றும் குறிப்பிடுவார்.

இவ்வாறான பின்னணியில் அரச தகவல் திணைக்களத்தின் அதிகாரிகள் இந்த வீட்டை இன்று (நேற்று) காணொளியாகப் பதிவு செய்துள்ளார்கள். முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச மீது சேறு பூசுவதற்கு ஏதாவதொரு விடயத்தை தேடிக்கொண்டு ஊடக கண்காட்சி நடத்துகிறார்கள் என்றார்.

## தாஜுதீன் கொலை வழக்கு தொடர்பில்

# நாமல் கலக்கமடைய வேண்டாம் உண்மைகள் வெளிவந்தே தீரும்

## தொழில் பிரதி அமைச்சர் எள்ளி நகையாடல்

ரக்பி வீரர் வசீம் தாஜுதின் இறப்புத் தொடர்பில் புதிய விடயங்கள் வெளியாகும்போது நாமல் ராஜபக்ச ஏன் கலக்கமடைய வேண்டும்? கலக்கமடைய வேண்டாம், பதற வேண்டாம். உண்மைகள் வெளிவரும் என்று நாமல் ராஜபக்சவுக்குக் கூறிக் கொள்கிறோம் எனத் தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரக்பி வீரர் வசீம் தாஜுதின் இறப்புக்கும் ராஜபக்ச குடும்பத்துக்கும் இடையில் தொடர்புண்டு. இதுதொடர்பில் கடந்த காலங்களில் வெளிப்படையாகவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த விவகாரம் குறித்து தற்போது முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த கால ஊழல் மோசடிகள், படுகொலைகள் தொடர்பில் முறையான விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே நாமல் ராஜபக்ச கலக்கமடையத் தேவையில்லை என்று அவரிடம் குறிப்பிட்டுக்கொள்கிறோம்.

ஆளும்தரப்பின் செயற்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் நல்ல விருப்பம் காணப்படுகிறது. ஊழல்வாதிகள் மற்றும் படுகொலையாளிகள்தான் அச்சமடைந்து போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

குறைப்பாடுகளைத் திருத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்தற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். மக்களுக்கு எதிரான எவ்வித அடக்குமுறைகளையும் ஆளும்தரப்பு செய்யவில்லை. சட்டத்தை கடுமையாக செயற்படுத்தும் போது ஊழல்வாதிகள் அதனை அடக்குமுறை என்று குறிப்பிடுவதை பெரிதுப்படுத்த போவதில்லை என்றார்.

# ஐ.ம.சக்திப் பிரதிநிதிகள் குழு ஐ.நா. அதிகாரியுடன் சந்திப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் குழுவினர், ஐக்கிய நாடுகளின் செயலகத்தின் தேர்தல் உதவிப் பிரிவின் பணிப்பாளர் மிச்செல் க்ரிஃபின் தலைமையிலான ஐக்கிய நாடுகள் தேர்தல் தேவைகள் மதிப்பீட்டுக் குழுவை சந்தித்து உயர் மட்டப் பேச்சு நடத்தியுள்ளனர்.

கொழும்பில் நேற்று இந்தப் பேச்சு இடம்பெற்றது. இலங்கையின் தேர்தல் நடைமுறையின் முக்கியச் செயற்பாட்டுக் கட்டங்களான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தல், வாக்களித்தல் மற்றும் வாக்குகள் எண்ணுதல் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாகக் கவனம் செலுத்தப்பட்டது.

சட்டங்களை மாற்றுவது தொடர்பான கலந்துரையாடல் சந்திப்பின் மையப் புள்ளியாக இருந்தது. கோட்டா முறைமைகள் மற்றும் தற்போதுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை ஆகியவற்றில் மாற்றங்களைச் செய்வது தொடர்பான சீர்திருத்த முன்மொழிவுகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி பிரதிநிதிகள் குழுவினர் கலந்துரையாடினர்.

மேலும், உலகளாவிய சூழலில் மாற்றங்களுக்கு ஏற்ப ஜனநாயக நடைமுறைகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். குறிப்பாக, அதிகரித்து வரும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சூழலில் ஜனநாயக நடைமுறைகளைப் பலப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்தினர்.

இலங்கையின் தேர்தல் களத்தில் உள்ள பல்வேறு பங்குதாரர்களின் தேவைகளைப் புரிந்து கொள்வதற்காக, ஐ.நா. குழுவின் பரந்த மதிப்பீட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் 14 பேருக்கு உடனடி இடமாற்றம்

பொலிஸ்சேவையில்கடமையாற்றும்பிரதிப்பொலிஸ் மா அதிபர்கள் 14 பேருக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கமையபொலிஸ்சேவையில்கடமையாற்றி வரும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 14 பேருக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணியிட மாற்றம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சொய்சா நலன்புரிச் சேவைகளுக்குப் பொறுப்பான மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் தர்மசேன நீர்கொழும்பு வலயத்திலிருந்து போதைப்பொருள் பிரிவு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராகவும், மேல் மாகாண போக்குவரத்து பிரிவு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரான சேனாதீர அப்பதவிக்கு மேலதிகமாக போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு பிரதி பொலிஸ்மா அதிபர் விஜேசேக்கர வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து மேல் மாகாண (தெற்கு) மாவட்டத்துக்குப் பொறுப்பான பதில் பொலிஸ்மா அதிபராகவும் , பதில் பொலிஸ்மா அதிபர் ஜயசிங்க சட்டப்பிரிவுக்குப் பொறுப்பான பதில் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து மேல் மாகாண (வடக்கு) பதில் பொலிஸ்மா அதிபராகவும், பதில் பொலிஸ்மா அதிபர் ஹேவாவிதாரண போதைப்பொருள் பிரிவுக்கான பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்துகேகாலைமாவட்டத்துக்குப்பொறுப்பான பதில் பொலிஸ்மா அதிபராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவு மாவட்டத்துக்கு பொறுப்பான பொலிஸ்மா அதிபர் ஹபுகோட அப்பதவியிலிருந்து வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும், இரத்தினபுரி மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹகிரில்ல அப்பதவியிலிருந்துதேசியபொலிஸ்பயிற்சிநிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளராகவும், தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளரான பிரதி பொலிஸ்மா அதிபர் சேனாரத்ன சட்டப்பிரிவு மாவட்டத்துக்கு பொறுப்பான பதில் பொலிஸ்மா அதிபராகவும், நிகவெரட்டிய வலயத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் கினிகே மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராகவும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நுவரெலியா மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரான சில்வா மேம்பாட்டு பிரிவு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராகவும், நிகழ்நெருக்க கண்காணிப்பு பிரிவுக்குப் பொறுப்பான பிதரி பொலிஸ்மா அதிபர் கொடித்துவக்கு மத்திய குற்ற விசேட பணியகத்தின் மாவட்டத்துக்குப் பொறுப்பான பொலிஸ்மா அதிபராகவும், பிரதி பொலிஸ்மா அதிபர் குமாரி மகளிர் பொலிஸ் படையணி தலைமையகத்திலிருந்து சிறுவர் மற்றும் மகளிர் துஸ்பிரயோக விசாரணைப் பிரிவு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் நலன்புரி சேவைகளுக்குப்பொறுப்பானமாவட்டபிரதிபொலிஸ்மா அதிபராகவும் , சிறுவர் மற்றும் மகளிர் துஸ்பிரயோக விசாரணைப் பிரிவு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ஜெயசுந்தர இரத்தினபுரி மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளில் ஏமாற்றிய ஆளும்தரப்பு தாஜுதீன் வழக்கிலும் அப்படியே நடக்கிறது

## ஹர்ஷன ராஜகருணா எம்.பி. கொதிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கர்தினால் உட்பட முழு கத்தோலிக்க மக்களையும் ஏமாற்றியுள்ள ஆளும்தரப்பு, இன்று றக்பி வீரர் வசீம் தாஜுதீன் விவகாரத்திலும் அவ்வாறே செயற்பட்டுள்ளது. வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் ஆளும்தரப்பால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கர்தினால் உட்பட முழு கத்தோலிக்க மக்களையும் ஏமாற்றியுள்ள ஆளும்தரப்பு இன்று விசாரணைகளை நிறைவு செய்வது இலகுவானதல்ல எனக் குறிப்பிடுகின்றது. இதேவேளை வசீம் தாஜுதீன் கொலை தொடர்பான பழியை ஓரிரு மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட கஜ்ஜா என்ற நபர் மீது சுமத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கஜ்ஜா என்பவரது மகன் ஊடகவியலாளர் மாநாடொன்றை ஏற்பாடு செய்து மேலும் பல முக்கிய விடயங்களைத் தெரிவித்திருக்கின்றார்.

தாஜுதீன் விவகாரத்தை பொலிஸ் ஊடாக ஊடக பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சித்த போதிலும், தற்போது அந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது. லசந்த விக்கிரமதுங்க மற்றும் பிரகீத் எக்னலிகொட போன்ற ஊடகவியலாளர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனக் கூறப்பட்ட போதிலும், இதுவரையிலும் அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது.

முதலீடுகள் தொடர்பிலும் ஆளும்தரப்பு பெருமிதமாகப் பேசிக்கொண்டிருந்தது. ஆனால் அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையில் முதலீடுகள் தொடர்பில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. மேற்குலக நாடுகளுக்கு எதிரான இந்த ஆளும்தரப்பு பின்பற்றும் கொள்கைகளால் வெளிநாட்டு முதலீடுகள் இழக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஊழல், மோசடிகளை ஒழிப்பதாகக் கூறிய அரசாங்கத்திலுள்ளவர்களின் அதிகாரத்தினாலேயே அபாயம் மிக்க 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டன.

இவற்றுக்கு மத்தியில் துறைசார் நிபுணர்களுடன் எந்தவித கலந்தாலோசனைகளும் இன்றி பல்வேறு சட்டங்களையும் ஆளும்தரப்பு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலேயே தற்போது மாணவர்களை தண்டித்தல் குறித்த சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆளும்தரப்பு சமூகத்தில் எந்தவொரு கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை. ஆசிரியர்களுக்கு மாத்திரமின்றி, பெற்றோருக்கும் தமது பிள்ளைகளின் ஒழுக்கம் தொடர்பில் பாரிய பிரச்சினை காணப்படுகிறது. அவ்வாறிருக்கையில் இவ்வாறான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது எதிர்கால சந்ததியினரின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் என்றார்.



# சொத்து விவரம் தராதவர்கள் மீது உரிய நடவழிக்கை எடுக்கப்படும்

## லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவிப்பு

2025 ஆண்டுக்கான வழங்கப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும் விபரங்கள் முழுமையாக வெளியிடப்படவில்லை. இந்நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் விவரங்களை சமர்ப்பிக்காதவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒருவரின் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான தகவல்களை பதிவேற்றம் செய்து அவற்றை தவறான முறையில் பயன்படுத்த வேண்டாம் என்று குறிப்பி;ட்டுக்கொள்கிறோம் என இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்தார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கானஆணைக்குழுவின்பணியகத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஊடாக சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான வெளிப்படுத்தல்களை பொறுப்பேற்றல் மற்றும் அவற்றை பாதுகாத்தல் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழான இலத்திரனியல் கட்டமைப்பின் ஊடாக இடம்பெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த இலத்திரனியல் கட்டமைப்பு தயாரிக்கும்வரை சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரங்களை ஆவணப்படுத்தப்பட்ட வகையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 83(7) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தில் 83 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய இலத்திரனியல் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டு வருகின்ற நிலையில் 2026 மார்ச் 31 ஆம் திகதி முதல் சொத்து மற்றும் பொறுப்புக்களை இந்த கட்டமைப்பின் ஊடாக முன்வைக்க முடியும்.

2023.09.15 திகதியன்று 2023 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டம் நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டாலும் 2024.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த சொத்து மற்றும் பொறுப்பு ஆகியவற்றை முன்வைப்பதற்காக இந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டிய ஒழுங்குவிதிகள் ஊடாக நிச்சயிக்கப்பட வேண்டிய மாதிரிப் படிவம் உரிய காலப்பகுதியில் தயாரிக்காத காரணத்தால் 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான சட்டத்தில் குறிப்பிடப்பட்ட மாதிரி படிவத்துக்கு அமைவாக சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களை சமர்ப்பிப்பற்கு அனுமதியளிக்கப்பட்டது.

அதற்கமைய 2024 ஆம் ஆண்டுக்குரிய சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்கள் அந்த அதிகாரிகளின் கீழ் உள்ள திணைக்களங்களின் பிரதானிகள் வசம் வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்ட நிலையில்,பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையை மாத்திரம் ஆணைக்குழு பெற்றுக்கொண்டது.

சமர்ப்பிக்கப்படும் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களை மக்கள் பார்வையிடும் வகையில் வெளிப்படுத்த வேண்டும் என்று ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 88 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.எவ்வாறாயினும் மத்திய இலத்திரனியல் கட்டமைப்பு தயாரிக்கப்படாத காரணத்தால் ஆவணப்படுத்தப்பட்ட வகையில் நேரடியாக சமர்ப்பித்த அறிக்கைகள் அனைத்தும் வெளிப்படுத்த முடியாது.ஆகவே நாட்டின் பதவி நிலைகளின் அடிப்படையில் 1 முதல் 14 வரையான பிரதான பிரதான பதவிகளை வகிப்பவர்களின் விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டுக்குரிய சொத்து மற்றும் பொறுப்புதொடர்பானவிபரங்கள்ஆவணப்படுத்தப்பட்ட வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவை கடந்த கால சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

2025 ஆண்டுக்கான வழங்கப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும் விபரங்கள் முழுமையாகவெளியிடப்படவில்லை.இந்நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன்விபரங்களைசமர்ப்பிக்காதவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.




# பெருந்தோட்ட தொழிலாளர் சம்பளம் ஒக்டோபர் 9 அறிவிக்கப்படவேண்டும்

## தொழில் பிரதி அமைச்சர் நிறுவனங்களுக்கு அறிவுறுத்து

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்த நிலைப்பாட்டை ஒக்டோபர் 9 பெருந்தோட்ட நிறுவனங்கள் அறிவிக்கவேண்டும். தொழில் அமைச்சும், பெருந்தோட்ட அமைச்சும் இணைந்து கம்பனிகளுடனான இணக்கப்பாட்டின் ஊடாக இந்த பிரச்சினைக்கு தீர்வு வழங்க முயற்சிப்பதாக பிரதி தொழில் அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

ஹட்டன்மாவட்டதொழில்அலுவலகத்தில்புதன்கிழமைஇடம்பெற்ற பயிற்சி பட்டறையொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழில் அமைச்சும், பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திஅமைச்சும்இணைந்துபெருந்தோட்டத்தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் பல சுற்று பேச்சு முன்னெடுத்துள்ளன. கடந்த செப்டெம்பர் 9ஆம் திகதி இறுதியாக பேச்சு இடம்பெற்றது. இதன் போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பை எவ்வாறு வழங்குவது என்பது குறித்து நீண்ட பேச்சு இடம்பெற்றது.

தற்போது 1350 ரூபா நாட்சம்பளமாக வழங்கப்படுகிறது. மேலதிக கிலோ ஒன்றுக்கு 50 ரூபா வழங்கப்படுகிறது. இம்மாதம் 9ஆம் திகதி அடுத்த பேச்சு இடம்பெறவுள்ளது. ஒரு மாத காலத்துக்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு குறித்த தமது நிலைப்பாட்டை அறிவிக்குமாறு கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நாம் யாருக்கும் உத்தரவிடவில்லை. கம்பனிகள், தொழிற்சங்களுக்கிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி அதன் ஊடாக இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

கடந்த காலங்களில் இவ்வாறு பல்வேறு நிறுவனங்களுடன் சுமூகமான பேச்சுகள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த கால அறிக்கைகளை பார்க்கும் போது பெருந்தோட்டத்துறையில் வருமானம் அதிகரித்துள்ளமையை தெளிவாகக் காண முடிகிறது. எனவே தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பை வழங்குவதில் எவ்வித தடையும் இல்லை. மாறாக வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியவில்லை எனில் அது யாருடைய தவறாகும்? அதற்கான நடவடிக்கைகள் கம்பனிகளாலேயே எடுக்கப்பட வேண்டும்.

எனவேதான் அவர்களுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. பலவந்தமாக நாம் எதையும் பெற முயற்சிக்கவில்லை. சம்பள பிரச்சினைக்கு அப்பால் பெருந்தோட்டத்துறையில் மேலும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதி தொடர்பான பிரச்சினையும் நீண்டகாலமாகக் காணப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் படிப்படியாக தீர்க்கப்பட வேண்டும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2025இல் வெளியிடப்பெற்றது